**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 43/2021**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 06th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடைசியாக வீ.கே.புதூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி, 2020 ம் ஆண்டு பணிஓய்வு பெற்று விட்டேன். நான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 16.12.2016 ம் தேதி, காலை 10.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திருமதி.உமாமகேஸ்வரி தலைமையில் நானும், முதல்நிலைக்காவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் காவலர் காசிராஜா ஆகியோர் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது, ஆலங்குளம் பஸ்ஸ்டாண்ட் பின்புறம், பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ராம்நகர், புதுப்பட்டி ரோடு களஞ்சியம் மகன் முருகன் என்பவர் கையில் வைத்திருந்த வெள்ளைநிற உரச்சாக்கு பையினை கீழே வைத்து விட்டு, ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து அவர் வைத்திருந்த வெள்ளைநிற உரச்சாக்கை பரிசோதித்தபோது, அதில் 180 மிலி

பிடிக்கக்கூடிய ஓல்டு செப் டீலக்ஸ் பிராந்தி எண்ணம் –11 இருந்தது. பிராந்தி பாட்டிலை திறந்து, நுகர்ந்து பார்த்தபோது, அதிலிருந்து வித்தியாசமான வாடை வந்தது. இது சம்பந்தமாக மேற்படி நபரை விசாரித்தபோது, அவர் அரசு மதுபானக்கடைகளில் பிராந்தி வாங்கி வந்து, அதிக போதைக்காக அதில் ஊமத்தங்காய் சாறு பிழிந்து தண்ணீர் கலந்தும் விற்று வருவதாக கூறினார். எனவே, எதிரியை விஷப்பிராந்தி வைத்திருந்த குற்றத்திற்காக சார்பு ஆய்வாளர் கைது செய்தார். பகுப்பாய்விற்காக இரண்டு பாட்டில்களில் 180 மிலி அளவு விஷபிராந்தியை சார்பு ஆய்வாளர் மாதிரிக்காக எடுத்து SHO சீல் வைத்தார். மீதி 9 பாட்டில்களை அத்தாட்சி பிறப்பித்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்திட முன்வராததினால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே கையெழுத்து செய்தோம். அத்தாட்சியிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1. பின்னர், எதிரியையும், சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து சார்பு ஆய்வாளர் நிலைய குற்ற எண்.419/2016, சட்டப்பிரிவுகள் 4(1–A) TNP Act–ன் படி வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்வதற்கு நான் உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

ஆலங்குளம் பஸ்ஸ்டாண்டானது காலை 10.00 மணிக்கு மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக இருக்க அழைக்கவில்லை என்றால் அந்த நேரத்தில் அங்கு யாருமில்லை. அத்தாட்சியை சம்பவயிடத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் தயார் செய்தார் என்றால் காவல்நிலையத்தில்

வைத்து தான் தயார் செய்யப்பட்டது. நானும், மற்ற சாட்சிகளும் காவல்நிலையத்தில் வைத்து தான் அத்தாட்சியில் கையெழுத்து செய்தோம். சார்பு ஆய்வாளர் அத்தாட்சியை கைப்பட எழுதினார். அவ்வாறு எழுதிய அத்தாட்சியை படித்து பார்த்து தான் நான் கையெழுத்து செய்தேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அத்தாட்சி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்பதினால் தான், பொதுமக்கள் யாரையும் நாங்கள் சாட்சியாக அழைக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN
Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.05.12 15:50:02 +0530